செ.வெ.எண்: 30 நாள்: 24.04.2017

# அரியலூர் மாவட்டத்திற்கு 2017-18ஆம் ஆண்டிற்கு ரூ.2110.55 கோடி முன்னுரிமை வங்கி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் (2017-18) ஆண்டிற்கு **ரூ.2110.55 கோடி** முன்னுரிமை வங்கி கடன்களாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (24.04.2017) வெளியிட அதனை முன்னோடி வங்கி மேலாளர் **திரு.எஸ்.இளஞ்சேரன்** பெற்றுக்கொண்டார்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலுக்கு **ரூ.1956.56 கோடி**, சிறு மற்றும குறு தொழில்களுக்கு **ரூ.35.75 கோடி**, கல்வி கடன் **ரூ.26.80 கோடி**, வீடுகட்டுதல் **ரூ.47.86 கோடி** மற்றும் பிற முன்னுரிமை தொழில்களுக்கு **ரூ.43.58 கோடியும்** அனைத்து வங்கிகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நபார்டு தயாரித்த செறிவு சார் கடன் திட்ட அறிக்கையை ஆதாரமாக கொண்டு இந்த முன்னுரிமை கடன் திட்டம் மதிப்பிடப்பட்டதாக முன்னோடி வங்கி தெரிவிக்கிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், பாரத ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் திரு.எஸ்.தியாகராஜ் மற்றும் வங்கி மேலாளர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.